This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# நில்லுங்கள் ராஜாவே!

## 1

*மாடு மனை போனால் என்ன?*
*மக்கள் சுற்றம் போனால் என்ன?*
*கோடிச் செம்பொன் போனால் என்ன–கிளியே*
*குறுநகை போறுமடி....!*

கண்ணிகளை எழுதின ஆசாமிக்காவது ஒரு கிளி குறுநகை என்று மிஞ்சியது. எனக்கு முச்சூடும் பறிபோச்சு. ஆனாலும் இப்படியா? ரேஸா? சூதாட்டமா? ஷேர் மார்க்கெட்டா? இல்லை. ஒரே செகண்ட், கையைச் சொடக்குகிற தேசாலம்கூட இல்லை நான்..... நான் இல்லை என்னுட்டாங்க!

அந்தச் சண்டாளன் செய்ததற்கு அவனை இந்தக் கதை முடிவதற்குள் கொன்றுவிட்டுத்தான் மறு காரியம் அதற்கு முன்னால் சிற்சில அறிமுகங்கள். உங்களுக்கு இதைப் படிக்க ஆரம்பித்தவுடன் ஏற்பட்டிருக்கும் குழப்பத்தைத் தவிர்க்க. என் மனோ ஆரோக்கியத்தைப் பற்றி உங்க சந்தேகங்களை நீக்க. நான் நிச்சயம் பைத்தியமில்லை! லெட்ஸ் மேக் இட் க்ளீயர். ஆரம்பத்தில் அந்தச் சந்தேகம் வேண்டவே வேண்டாம்.

நான் யார்?

'அஹம் பிரம்மம்'னு உபநிஷத்திலிருந்து 'நான் ஜவஹர் விட்டல் கம்பெனி டைக்டர் என்று வெவ்வேறு தளங்களில் பதில் சொல்லலாம். நான் ஒரு கணவன், ஒரு தகப்பன், இரை தேடுபவன், உள்ளுக்குள் இச்சைகள் வைத்திருப்பவன். நான் ஒரு மனிதன், ஹோமோ–ஸேபியன்ஸ் என்று எத்தனை 'நான்'கள். எல்லாத்தையும் ஒரே செகண்டில் இழப்பது என்றால்? மறுபடியும் குழப்புகிறேன் இல்லையா?

ஜவஹர் விட்டல் என் பெயர். அப்பாவுக்கு தேசபக்தி அதிகம். ஜவஹரும் போய்விட்டார். என் அப்பாவும் போய்விட்டார்.... தேசபக்தியுடன் அப்பா ரூபா நூற்றைம்பதுதான் 'கேஷ்' வைத்திருந்தார். அவர் இறந்தபோது எனக்குப் பத்தொன்பது வயசு. பட்டதாரி. எங்கள் கம்யூனிட்டியில் படிச்சவங்க ஜாஸ்தி கிடையாது. பக்தவத்ஸலம் என்னை ஆதரித்து தம் மகளையும் கட்டிக் கொடுத்து (புவனேஸ்வரி) தொழிலுக்கும் முதல் கொடுத்து. தொழில் விரிவாகி, மாமன் காலமாகி, மகள் பிறந்து, பற்பல விருத்திகள் ஏற்பட்டு, நாற்பது வயசில் பதினெட்டு லட்சம் பெறுமான ஒரு பெரிய 'டீலக்ஸ் ஸ்பேர் பார்ட்ஸ் இண்டஸ்ட்ரி'க்குச் சொந்தக்காரன்னா, வாழ்க்கையில் என் முன்னேற்றத்தில் ஒரே ஒரு படிப்பினை, நீதி: 'பணக்காரியைக் கல்யாணம் செய்!"

புவனேஸ்வரி இப்படியொன்றும் என் தலையில் கட்டப்பட்ட அழகில்லாத பெண் என்பதற்கில்லை.